வெளியீடு எண் 112.

உண்மை விளக்கம்

தருமபுர ஆதீனம்

His Holiness Sri-la-Sri Subramanya Desika Gnanasambanda Paramacharya Swamigal

25th in the Holy Line of Dharmapuram Adhinam.

வெளியீடு எண் 112.

உ

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

உண்மை விளக்கம்

ஆங்கில மொழிபெயர்ப்புடன்

ஆசிரியர்

திருவதிகை மனவாசகங் கடந்தார்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அவர்களின்

ஆணையின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

பிரதிகள் 500.

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

முகவுரை

தமிழ்த்திருநாடு உய்யத் திருக்கயிலாயபரம்பரை நமக்குத்தந்தருளிய செல்வம்பதினான்கு. செல்வந் தந்த சீர்த்தியோர் அறுவர். அச்செல்வங்களுள் ஆறுவதாகமிளிர்வது உண்மைவிளக்கம். உண்மை விளக்கத்தில் மனவாசகங்கடந்தாராகிய மாணவர் தமது ஞானாசாரியப் பெருந்தகையாரைப் பார்த்து, தத்துவங்கள் யாவை? ஆணவம் வினை என்பன யாவை? நான் யார்? நீர் யார்? நாதன் நடம்செய்யும் அஞ்செழுத்து யாது? என்ற சுத்த வினாக்கள் சிலவற்றைக் கேட்டு நிற்கின்றார். மெய்கண்ட குருநாதன் "உள்ளபடி யுரைக்கக்கேள்" என்று தொடங்கி 3-முதல் 21-ம் பாடல்வரை ஆன்ம வித்தியா சுத்த தத்துவங்களையும் அவற்றின் இயல்புகளையும், 22-ம் பாடலில் ஆணவகன்ம மலங் களின் இலக்கணத்தையும், 23-முதல் 26-ம் பாடல் முடிய சுவைகள் தம்மைத்தாம் அறியா அவை சுவைப்பவனால் அறியப்படும் அதுபோல தத்து வங்களை நாடி அறிகின்ற அறிவாய் நின்றவனே நீ யென ஆன்மவியல்பையும், 27-முதல் 29-முடிய அகர உயிர்போல் அறிவாகி நிற்கும் இறை இயல் பையும், 30-முதல் 38-முடிய ஆனந்தக்கூத்தன் நடனம் அஞ்செழுத்து வடிவாயமைந்திருத்தலையும்,

அந்த நடனத்தால் ஆன்மாக்கள் எய்தும் பயனை யும், நடனத்தை ஆன்மாக்கள் காணவேண்டிய முறையினையும், 39-முதல் ஆறு பாடல்களால் அஞ் செழுத்தே எல்லாமாயிருக்கின்றது என்பதையும், 45-முதல் ஆறு பாடல்களால் முத்திநிலையுற்றோர் இறைவனோடு பழத்தின் இரசம், போதின் மணம், அங்கியின் வெம்மை, வீணையில்நாதம்போல விரவி நிற்கும் விளக்க முதலியனவும், இறுதி இரு பாடல் களால் முத்தர் குருலிங்க சங்கம வழிபாடியற்ற வேண்டுமென்பதும், விளங்கக் கூறப்பெற்றுள்ளது. இறுதிப்பாடல் இவ்வளவு அநுபூதி நிலையையும் பெருங்கருணையால் அறிவித்தருளிய ஆசாரியனுக்கு நன்றியறிதல் உணர்த்துகின்றது.

இந்நூலை நமக்குத் தந்த ஞானவள்ளல் **மன வாசகங்கடந்தார்.** இவர்கள் அநுபூதி நிலையில் ஆழ்ந்து இருந்தமை காரணமாக இந்தப்பெயர் அமைந்திருக்கவேண்டும் என்று எண்ண இட முண்டு. இவர்கள் அவதாரத்தலம் சைவங்காத்த தவ நங்கை தொண்டியற்றி, உயர்ந்த தம்பியை உய்வித்த திருவதிகையாகும்.

இந்நூற்பயனை தமிழ்மக்களே யன்றி வெளி நாட்டாரும் அடைந்துய்யவேண்டும் என்ற பேரவா வினால் சைவசித்தாந்தச் செல்வர், ஆங்கிலப் பேரறிஞர் **J. M.** நல்லசாமிப் பிள்ளை B. A., B. L., அவர்கள் நல்ல எளிய ஆங்கில நடையில் பெயர்த்து எழுதினர்.

இதனைத் திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்து இருபத்தைந்தாவது குருமூர்த்தியாக எழுந்தருளி ஞானச்செங்கோல் நடத்திவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** தமது ஞான ராஜ்ய எல்லையை நாற்றிசையிலும் நன்கு பரப்பத் திருவுளங்கொண்டு அச்சியற்ற ஆணை தந்தார்கள். அதுவும், ஞானபீடத்தை விளக்கிய நற்குரவராகிய 19-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு ஆலயம் புதிதாக எடுப்பித்து **விய ஆண்டு வைகாசித்திங்கள் உகூ-ம் நாள் ஸ்திரவாரதினம் மகா கும்பாபிஷேகம் செய்வித்து அதன் நினைவுமலராக இஞ்ஞான நூலை** அச்சிடுவித்து நாற்றிசையும் பரப்புகிறார்கள்.

இங்ஙனம் மும்மலக்குறும்பு அழித்துப்பேரின்ப நாட்டை விளங்கச்செய்யும் இருபத்தைந்தாவது குருமூர்த்திகள் ஞானச்செங்கோல் நீடுவாழ வாதவூரடிகளுக்கு ஞானம்வழங்கிய சொக்கநாதர் திருவடியைத் துதிக்கின்றேன்.

இங்ஙனம்,

தருமபுரம்.
7—6—46.

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான், ச. தண்டபாணி தேசிகர்,
தமிழ்ப்பேராசிரியர், திருப்பனந்தாள்.

இம்மலர் தாங்கும் எழிற்குரவர் :-

ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்

பதினெட்டாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானதேசிகரவர்கள், இவர்களுடைய நிர்வாகத் திறமையை நன்குணர்ந்து 22—4—1900 த்தில் இவர்களுக்குச் சின்னப்பட்டம் கட்டி உயிலும் எழுதிவைத்தார்கள். இவர்கள் காசி யாத்திரை சென்று திருப்பனந்தாளுக்கு எழுந்தருளி ஆங்கே 1—12—1906ல் பரிபூரணமாயினர்.

அதுமுதல் சின்னபட்டத்திலிருந்தும் பின்பு மகாசந்நிதானமாக இருந்தும் துறவரசுசெலுத்திய இவர்களது ஆட்சிகாலத்து இருந்த வியவகாரம் நிர்வாகம் இவற்றால் உண்டான சிரமங்கள் ஆலவாயண்ணல் திருவருளால் அகன்றன.

மடாலயச்சுற்றுமதில் திருப்பணி, திருக்கோயில் திருப்பணி இவைகளை அடிக்கடி இவர்கள் நேரிற் சென்று கவனித்து நடத்திவந்தார்கள்.

இன்றைக்கு இம்மடமானது இவ்வளவுஉயர்ந்த நிலையில் இருப்பதற்கு இவர்களுடைய பெருமுயற்சியே காரணமாகும். இவ்வளவு முயற்சியுடன் சொக்கலிங்க பூஜையையும் இறுதிவரையும் விடாது தம் திருக்கரத்தாலேயே இயற்றிவந்தார்கள். இத் தகைய உழைப்பின் உருவமாகிய இவர்கள் 1914 ல் சிவஞான தேசிகருக்கு ஆட்சித் திறத்தை அளித்து முத்திநிலை யெய்தினர்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

௧௬-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்.

கக-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்

குருமூர்த்த ஆலயம்.

உ
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

உண்மை விளக்கம்

UNMAI VILAKKAM

This short treatise consisting of 54 Stanzas is one of the Fourteen Siddhanta Sastras, and its author is said to be Tiruvadigai Manavasagam Kadandar, one of the 49 disciples of St. Meykandar. That he was a native of Tiruvadigai and a pupil of St. Meykandar is certain, but there are no other particulars available about his life-history. That he must have been an advanced sage is evident from the name (காரணப்பெயர்) he bears, which means "he who has passed beyond thought and speech".

The author tries to expound in these few pages, the truth of the Sacred agamas, without going into argumentation, just so much as is sufficient for the aspirant after spiritual Truth, to bring the teaching into actual daily practice. They are in the form of questions

addressed to the Teacher St. Meykandar and answers elicited from him. The latter part of the treatise explains the truth of the Panchakshara and Sri Nataraja Symbols. We hope the book will be of use to many.

வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மை விளக்க முரைசெய்யத்—திண்மதஞ்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம். க

We place Him, in our heart, the Five-armed God in strong rut of russet colour, tusked mouth and pot-belly; so that we may be freed of our ignorance and be enabled without fault to spread the Light of Truth, to be gathered from the Sacred Agamas. 1

பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதாநந் தப்பொருளா
மெய்காட்டு மெய்கண்டாய் விண்ணப்பம்—பொய்காட்டா
மெய்யா திருவெண்ணை வித்தகா சுத்தவினா
வையாநீ தான்கேட் டருள். உ

O Thou, my teacher, that, perceiving the truth, showdst the truth of Supreme knowledge and Bliss after removing the falsehood, by proving it to be false.

O Thou, Truth, that will not give out false-hood,
O Thou, that residest in Tiruvennainallur,
Hear, O Thou, my humble petition, and deign to
answer my queries! 2

ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாறா வினையேது மற்றிவற்றின்—வேறாகா
நானேது நீயேது நாதனட மஞ்செழுத்துத்
தானேது தேசிகனே சாற்று. ௩

O, my Teacher, explain to me the following!
What are the 36 tattvas? What is Anava?
What is that Karma which arose even then?
What am I who seem to differ from these?
Who art Thou? What is the Lord's Sacred Dance
and what is the truth of the Panchakshara? 3

உள்ளபடி யித்தை யுரைக்கக்கே ளுன்றனக்கு
வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து—தெள்ளியசீ
ராகமங்கள் சொன்ன வடைவிலே யானந்த
யோக நிகழ்புதல்வா வுற்று. ௪

O my son, who is immersed in Bliss-ful Yoga, hear what I am now imparting to you in accordance with the teachings of the Supreme Agamas, graciously uttered of yore, by the Supreme Siva. 4

நாற்கோணம் பூமிபுன லண்ணுமதி யின்பாதி
யேற்குமனல் முக்கோண மெப்போது—மார்க்கு
மறுகோணங் கால்வட்ட மாகாய மான்மா
வுறுகாய மாமிவற்றா லுற்று. ௫

The earth's form is a four-sided figure. The water is of the form of a crescent. The fire is of the form of a triangle always. The air is a six sided-figure. The Akas is a circle. And the soul gets a body formed of these. 5

பொன்பார் புனல்வெண்மை பொங்கு மனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்றூம—மென்பா
ரெழுத்து லவரயவப் பாராதிக் கென்று
மழுத்தமதாய் நிற்கு மது. ௬

The colour of these is golden, white, red, black, smoky-coloured, respectively and their letters are ல, வ, ர, ய, ஹ. 6

குறிகுலிசங் கோகனதங் கொள்சுவத்தி குன்று
வறுபுள்ளி யாரமுத விந்துப்—பிறிவின்றி
மண்புனறீக் கால்வான மன்னு மடைவேயென்
றெண்புதல்வ வாகமமோ தும். ௭

Thier symbols are diamond-sword, the lotus-flower, SWASTIKA, the six spots and the AMRITA-BINDU respectively. So the old Agamas declare, O my Son. 7

பாராதி யைந்துக்கும் பன்னுமதி தெய்வங்க
ளாரா ரயனாதி யைவரா—மோரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்காற் றோற்றமுத லைந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார். ௮

The Gods for the elements Earth etc., are Brahma, Vishnu, Rudra, Maheswara, and Sadasiva; and their functions are respectively Creation, Sustentation, Regenaration, Giving Rest (Tirobhava)* and showing Grace (Anugraha). 8

*The third and the fourth, the functions are absorption and obscuration. —Editor.

படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்
றுடைப்ப னுருத்திர னுஞ் சொல்லிற்—றிடப்பெறவே
யென்றுந் திரோபவிப்ப னீசர் சதாசிவரு
மன்றே யநுக்கிரக ராம். ௯

Brahma creates; the lotus-eyed Vishnu protects; Rudra destroys, and Isa gives them rest † and Sadasiva shows grace always. 9

மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமா
மொண்கனல்சுட் டொன்றுவிக்கு மோவாமல்—வண்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காய [கால்
நிரந்தரமாய் நிற்கு நிறைந்து. ௧0

The Earth is hard, water cool, and fire hot, air flows hither and thither, and Akas gives room to all. 10

உள்ளபடி மாபூத மோதினோ முன்றனக்குக்
கள்ளமிடு மைம்புலனுங் கட்டுரைக்கின்—மெள்ளவே
யோசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசைதரு மைம்புலனே யாம். ௧௧

We have now set forth the number and quality of the elements. If we are to tell you about the five deceitful Perceptions, they are the desire-producing Sound, Touch, Sight, Taste and Smell. 11

---

†Isa obscures thus enabling the souls to experience the fruits of their latent Karma.

ஞானேந் திரியங்க ணன்று யுரைக்கக்கே
ளூன மிகுபூத முற்றிடமா—வீனமாஞ்
சத்தா தியையறியுந் தானஞ் செவிதோல்கண்
ணத்தா லு மூக்கென் றறி. கஉ

Hear the enumeration of the JNANENDRIYAS; Know them to be the ear, the skin, the eye, the tongue and nose, which perceive the low sensations in this low world. 12

வானிடமாய் நின்றுசெவி மன்னு மொலியதனை
யீனமிகுந் தோல்கா லிடமாக—வூனப்
பரிசந் தனையறியும் பார்வையிற்கண் ணங்கி
விரவியுரு வங்காணு மே. கங

நன்றாக நீரிடமா நாவிரதந் தானறியும்
பொன்று மணமூக்குப் பூவிடமா—நின்றறியு
மென்றோது மன்றே யிறையா கமமிதனை
வென்றார்சென் றாரின்ப வீடு. கச

The ear perceives sound through Akas. The body perceives touch through the air. The eye perceives light through fire. The tongue perceives taste through water. And the nose perceives smell through the earth. So the Agamas declare. They who conquer these senses secure the Bliss-ful Beautitude. 13-14

கண்ணுதனூ லோதியிடுங் கன்மேந் திரியங்க
ளெண்ணும்வச னாதிக் கிடமாக—நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதமுபத்த
மாக்கருது நாளு மது. கரு

The Karmendriyas giving rise to speech etc., are mouth, feet, hands, anus and the genital organs. 15

வாக்காகா யம்மிடமா வந்துவச னிக்குங்கால்
போக்காறுங் காற்றிடமாப் புல்கியன—லேற்கு
மிடுங்கை குதநீ ரிடமா மலாதி
விடும்பா ரிடமுபத்தம் விந்து. கசு

The mouth speaks through the aid of **Akas**; the feet move through the aid of air; the hands work through the aid of fire; the anus excretes through the aid of water; the genital organs give pleasure through the aid of earth. 16

அந்தக் கரண மடைவே யுரைக்கக்கே
ளந்தமனம் புத்தியுட னாங்காரஞ்—சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கு முணர். கஎ

Hear now the enumeration of the Antahkaranas. They are Manas, Buddhi, Ahankara and Chitta. They respectively conceive, reason, will and reflect. 17

ஓதியிடு நாலாறு முற்றான் மதத்துவமென்
றாதி யருணூ லறையுங்காண்—டீதறவே
வித்தியா தத்துவங்க டம்மை விளம்பக்கே
ளுத்தமனே நன்றா வுனக்கு. கஅ

The foregoing 24 tattvas are stated by ancient Agamas to be the Atma-tattvas. Hear now the Vidya-tattvas expounded by me. 18

கால நியதி கருதுங் கலைவித்தை
யேலவிரா கம்புருட னேமாயை—மாலறவே
சொன்னோ மடைவாகச் சொன்னவிவை தம்முண்மை
யுன்னி யுரைக்கநா முற்று. ௧௯

Time, Niyati, Kala, Vidya, Raga, Purusha, Maya, this is their order. Hear now their nature with attention. 19

கல்லை பலம்புதுமை யெப்போது நிச்சயித்த
லல்ல றருங்கிரியை யாள்மாவுக்—கொல்லை
யறிவாசை யைம்புலனு மாரவருங் காலங்
குறியாய் மயக்கென்று கொள். ௨௦

Time measures the past, gives enjoyment in the present, and contains new store for the future. NIYATI-tattva fixes the order and sequence of Karma. KALA-tattva induces action. VIDYA-tattva induces intelligence. The Purusha-tattva induces perception of the five senses. And Maya induces doubt and ignorance. 20

வித்தியா தத்துவங்க ளேழும் விளம்பினோஞ்
சுத்தமாந் தத்துவங்கள் சொல்லக்கே—ணித்தமாஞ்
சுத்தவித்தை யீசுரம்பின் சொல்லுஞ் சதாசிவநற்
சத்திசிவங் காணவைக டாம். ௨௧

We have now stated the Vidya-tattvas. Hear now the Suddha tattvas. They are Suddha-Vidya, Iswara, Sadasiva, Sakti and Siva tattvas. 21

சுத்தவித்தை ஞானமிகுந் தொன்மையா மீசுரந்தா
னத்தன் றொழிலதிக மாக்கியிடு—மொத்தவிவை
சாதாக் கியமென்னுஞ் சத்தி சிவங்கிரியை
யாதார ஞானவுரு வாம். ௨௨

*Suddha-Vidya induces more intelligence than action. Iswara tattva induces more action than intelligence. Sadasiva-tattva induces them both in equal proportion. Sakti-tattva induces action and Siva-tattva induces Jnana alone. 22

ஆறாறு தத்துவமுஞ் சொன்னோ மடைவாக
மாறா மலமிரண்டும் வாசொல்லக்—கூறி
லறியாமை யாணவமீ யானசுக துக்கங்
குறியா வினையென்று கொள். ௨௩

†We have now fully stated the 36 Tattvas, Hear now about the two kinds of Mala, Anava and Karma. Stated, Anava induces ignorance; Karma Mala induces you to identify yourself thoroughly with the chain of pleasures and pains. 23

---

*All these 36 tattvas are component parts of the universe of matter (Maya) all-powerful and all-intelligent, in union with which the soul gets rid of its darkness, and regains its light. This Siva tattva and Sakti-tattva etc., forming only matter should not be confounded with the Supreme Siva and His Sakti.

†This Karma as defined here is exactly what that Buddhists understand by the individual Ego, or individuality which of course subsists from moment to moment and is not anything subsisting permanently.

ஆருறு தத்துவமு மாணவமும் வல்வினையு
மாறு வருளால் வகுத்துரைத்தீர்—வேறுகா
வென்னை யெனக்கறியக் காட்டீ ரிவைகண்டே
னுன்னரிய தேசிகரே யுற்று. உச

O Thou rare Teacher, Thou hast explained to me the nature of the 36 Tattvas, and Anava and Karma. Deign now to show me the nature of myself who seems to differ and not differ from these. 24

நன்று வுரைக்கக்கே ணல்லசித்தின் முன்னசித்தின்
கொன்றாது சித்தசித்தை யோராது—நின்றிவற்றை
யன்றே பகுத்தறிவ தான்மாவே யென்றுமறை
குன்றாம லோதுங் குறித்து. உரு

Hear well what I state. Achit cannot subsist before Pure Chit. Chit cannot perceive Achit. The Atma (Soul) is what distinguishes and perceives both Chit and Achit. So the Vedas declare without doubt.

தத்துவங்க ளாறாறுந் தம்மைத்தா மென்றறியா
வெத்தன்மை யென்னி லியம்பக்கேள்—சுத்தமா
மாறு சுவையு மறியாவே தம்மைத்தாஞ்
சூறி லிவையிவைபோற் கொள். உசா

Hear now how the 36 Tattvas cannot be conscious of themselves. The six kinds of taste cannot perceive themselves. So also the Tattvas do not know themselves. 26

ஆறு சுவையு மருந்தி யவைதம்மை
வேறொருவன் கூறியிடு மேன்மைபோ—லாறாறு
மொன்றொன்றாய் நாடியுணர்ந் தோதிலதி லுற்றறிவாய்
நின்றபொரு ளானேகா ணீ. ௨௭

As a person has to taste these six kinds of taste and then perceive them, so you are the intelligent person who uniting with these Tattvas perceives each and all of them. 27

குன்றா வருளாலே கூறினீ ரென்வடிவு
பொன்றாத நும்முருவம் போதியீர்—நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமா போலே யுனதறிவி
னண்ணியறி வித்திடுவோ நாம். ௨௮

"Out of thine undiminished grace, hast thou shown me my nature. Explain to me Thy own Imperishable Form." "As the Sun enables the eye to see, so will we enlighten you and your intelligence." 28

அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்பொறிக
ளின்றி யறியா விவையென்ன—நின்றதுபோ
லோவாம லுன்னை யுணர்த்துவோ முன்னறிவின்
மேவாமன் மேவிநா மே. ௨௯

Know more. The senses, cannot understand without the soul, and cannot understand the soul. So also do we enlighten you without your being able to perceive US. 29

அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போன்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினோ—மெக்கண்ணா
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமமோது நாடு. ௩௦

"As the Vowel letter '*A*' is to the rest of the letters, so do we stand as the life of all life. When we are not present in any soul, then will there be no light. So the good Agamas declare". 30

நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத் தஞ்செழுத்தா
லுற்றுருவாய் நின்றாட லுள்ளபடி—பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணை மெய்கண்ட நாதனே
தண்ணா ரருளாலே சாற்று. ௩௧

O Meykandanatha graciously expound so that I may understand the nature of the Sacred Dance with the sound of the five letters seen by the sages. 31

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
யவாயமற நின்றாடு வான். ௩௨

"O my son, hear. The Supreme Intelligence dances in the soul formed of the letter YA, with a form composed of the five letters SI, VA, YA, NA, MA for the purpose of removing our sins. 32

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். ௩௩

Hear now how the Dance is performed. In his feet is NA; in his Navel is MA; in His shoulders is SI; in his face is VA; in his Head is YA.* 33

சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான். ௩௪

¶The hand holding the drum is SI, the hand held out is VA, The hand holding out protection is YA; the hand holding the fire is NA; the foot holding down Muyalaka is MA. 34

ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா—மாங்கார
மற்றா ரறிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின். ௩௫

The arch (திருவாசி) over Sri Nataraja is OMKARA; and the AKSHARA which is never separate from the OMKARA is the filling Splendour. This is the dance of the Lord of Chitambara. They understand this who have lost their self (Ahankara). Understanding, they leave their births behind. 35

* These letters have to be contemplated in those parts.

¶This is another form of contemplating the Panchakshara.

தோற்றந் துடியதனிற் றேயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. ௩௬

Creation starts from the Drum. Protection proceeds from the Hand of Hope. The fire produces Destruction. From the Foot holding down proceeds TIROBHAVA; the Foot held aloft gives Mukti. 36

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தா
லாநந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்த
லெனெந்தை யார்பரதந் தான். ௩௭

By these means, Our Father scatters the darkness of MAYA, burns the strong KARMA, stamps down MALA (Anava) and showers Grace, and lovingly plunges the soul in the Ocean of Bliss. This is the nature of His Dance. 37

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடு—மாநந்த
மொண்டருந்தி நின்றாடல் காணுமருண் மூர்த்தியாக்
கொண்டதிரு வம்பலத்தான் கூத்து. ௩௮

The SILENT Jnanis, destroying the three kinds of MALA establish themselves where there selves are destroyed. There they witness the sacred Dance filled with Bliss. This is the Dance of the SABHANATHA whose very form is Grace. 38

உரையுணர்வுக் கெட்டா வொருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகடான் பாதி—பரையிடமாக்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. ௩௯

The One who is past thought and speech assumes graciously the Form composed of the PANCHAKSHARA in the Dancing Hall of PARASAKTI, so as to be seen by his Consort, Uma, Haimavathi. They never see births who see this mystic Dance." 39

நாதாந்த நாடகத்தை நன்றா வருள்செய்தி
ரோதி ரெழுத்தஞ்சு முள்ளபடி—தீதறவே
யஞ்செழுத்தீ தாகி லழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச வருட்குருவே சாற்று. ௪௦

O my gracious Guru! Thou hast explained to me beautifully the nature of the NADANTA Dance. Let me now know the nature of the Panchakshara. Can they be one with the letters which are perishable? 40

உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும் பொருடான் சலியாது—மற்றதுகே
ளீசனரு ளாவி யெழிலார் திரோதமல
மாசிலெழுத் தஞ்சினடை வாம். ௪௧

"The Symbols of these letters may be perishable but not their connotation in any language. The meanings of the five letters respectively are God, His Grace (Sakti), Soul, Tirobhava, and MALA. 41

சிவனரு ளாவி திரோதமல மைந்து
மவனெழுத் தஞ்சி னடைவா—மிவனின்று
நம்முதலா வோதிலரு ளுடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று. ௪௨

God, Grace, Soul, Tirobhava, and Mala are the purport of the five letters (Sivayanama). If pronounced beginning with NA, you will not obtain Grace. You will obtain it when you pronounce it beginning with SI.

அண்ணன் முதலா மழகா ரெழுத்தைந்து
மெண்ணி லிராப்பகலற் றின்பத்தே—நண்ணி
யுருளா னதுசிவத்தே யாக்கு மணுவை
யிருளா னதுதீர வின்று. ௪௩

If this beautiful PANCHAKSHARA is meditated upon, the soul getting rid of its ANAVAMALA will land in the Region where there is neither light nor darkness, and there, God's Grace (Sakti), will unite it to Sivam. 43

ஆதி மலமிரண்டு மாதியா வோதினாற்
சேதியா மும்மலமுந் தீர்வாகா—போத
மதிப்பரிதா மின்பத்தே வாழலா மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே. ௪௪

If the PANCHAKSHARA is pronounced with the letters denoting the two MALAS then will he not get rid of his three MALAS, and obtain Bliss. If pronounced otherwise according to law, your JNANA will be boundless and you can live in Bliss. 44

அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு
மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து—மஞ்செழுத்
யாநந்த தாண்டவமும் யாவைக்கு மப்பாலா [தே
மோனந்த மாமுத்தி யும். ௪௫

In the PANCHAKSHARA are found the Agamas and the Vedas, given out by the gracious God. In it, are found the PURANAS. In it, is the Blissful Dance. And in it, is found the silent Mukti, which ısses beyond all. 45

முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை யிசையிற்றி—னொத்த
விரதமணம் வெம்மை யெழிஞதம் போல
விரவுவரென் றோதும் விதி. ௪௬

The Agamas declare that the nature of the union cured by the Muktas is like that of the fruit and its ste, fire and its heat, the Veena and its tune. 46

தத்துவங்க ளெல்லாஞ் சகசமா யான்மாவிற்
பெத்தத்தி னிற்கின்ற பெற்றிபோன்—முத்திதனிற்
சித்தமல மற்றார் செறிந்திடுவ ரென்றுமறை
சத்தியமா வோதியிடுந் தான். ௪௭

The Vedas strongly declare that .. the various attvas are found united inseparably in the bound ndition, so the souls in the freed condition will dwel one with God. 47

ஆதவன்றன் சந்நிதியி லம்புலியி னார்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோ—னாதாந்தத்
தண்ண றிருவடியி லான்மா வணைந்தின்பக்
கண்ணி லழுந்தியிடுங் காண். ௪௮

As the moon's light is indistinguishable in the Light of the Sun, so will the soul unite itself to the foot of the Supreme Lord and plunge itself in Bliss. 48

சென்றிவன்றா னொன்றிற் சிவபூ ரணஞ்சிதையு
மன்றவன்றா னொன்றுமெனி லந்நியமா—மின்றிரண்டு
மற்றநிலை யேதென்னி லாதித்த னந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோற் கொள். ௪௯

If it be said that the soul had to go and unite itself to God, then the Omnipresence of Siva will be destroyed. If God is said to have united Himself to the soul, then they must be different. But what then is the truth? The position is like that of the Sun which surrounds the man who had lost his blindness.

வாக்கு மனமிறந்த வான்கருணை யாளனுருத்
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப்போ னித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு. ௫௦

Thou tellest me that the Supreme one, who is past thought and speech, is gracious and suffers no taint, and that like this PATI, the PASU and PASA are also eternal. Prove this in MUKTI also. 50

முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யீத்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகொளப் பா. ௫௧

"O my Son, Hear how they are in MUKTI. He who enjoys the Supreme Bliss is the soul. He who imparts this Supreme Bliss is the First Cause. That which increase this happiness in MALA. Understand this in all love". 51

அப்பாவிம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பா யருளாலே செப்பக்கே—ளொப்பில்
குருலிங்க வேடமெனக் கூறியிவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண். ௫௨

"O my father, let me know the unfailing means of securing this Mukti ?". "Hear me state this. They who regard and worship the GURU, LINGA, and GOD'S DEVOTEES as the incomparable God will not suffer births and deaths." 52

கற்று மனம்போற் கசிந்[illegible]சிந் தேயுருகி
யுற்று[illegible]ான் லிங்க முப[illegible]வேடம்—[illegible]ற்றாக
முத்தித் தலைவர் [illegible]மூமலத்தை மோசிக்கும்
பத்திதனி லின்றிவர் பார். ௫௩

"Melting in Love, as the cow that had calved recently, the Jivan-muktas will take strong hold of the

GURU, LINGA and BAKTAS, and will be possessed of great love to them, which will destroy their sins". 53

வாழ்ந்தே னருட்கடலே வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமன் மேதினியிற்—சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத் தவப்பயனே யுற்று. ௫௪

O, Meykandanatha, the fruit of true Penance, who dwellest in both Tiruvenneynallur and Svetavana, O, Ocean of Grace, I have been saved by thee, saved from being tossed about in the Ocean of Sorrow. 54

மன்னதிகை வாழு மனவா சகங்கடந்தான்
மின்னனைய வாழ்வி லுறு மெய்கண்டான்—பண்மறை
வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா [கன்
வுண்மைவிளக் கஞ்செய்தா னுற்று.

முற்றிற்று.